## August 11, 2025 - தினமணி செய்தித்தாள் - சிறு துணுக்கள்

1. மாமல்லபுரத்தில் நடைபெற்ற ஆசிய அலைச்சறுக்கு சாம்பியன்ஷிப்பில் இந்தியாவின் ரமேஷ் புதிஹால் வெண்கலப் பதக்கம் வென்றார். இப்போட்டியின் வரலாற்றில் பதக்கம் வென்ற முதல் இந்தியர் என்ற பெருமையை அவர் பெற்றார்.
2. விசாகப்பட்டினத்தில் சேவையில் இணைவதற்கு முன்பு வெள்ளோட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்த இந்திய கடற்படையின் அதிநவீன போர்க்கப்பல் ஹிமகிரி.
3. ரஷிய கச்சா எண்ணெய் இல்லாமலும் இந்திய சுத்திகரிப்பு நிறுவனங்களால் செயல்பட முடியும். ஆனால் அதை ஈடுகட்ட பொருளாதார மற்றும் வர்த்தக ரீதியில் பெருமளவிலான முயற்சிகளை இந்தியா மேற்கொள்ள வேண்டியிருக்கும் என அமெரிக்காவைச் சேர்ந்த கேப்லர் நிறுவனத்தின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டது.
    - i. தற்போது ரஷியாவில் இருந்து ஒரு நாளைக்கு இறக்குமதி செய்யப்படும் 18 லட்சம் பீப்பாய்களுக்கு மாற்றாக வேறு நாட்டில் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்யும்பட்சத்தில் ஆண்டுக்கு ரூ.26,200 கோடி முதல் ரூ.43,700 கோடி வரை கூடுதலாக செலவிடும் சூழல் ஏற்படும்.
    - ii. குறிப்பாக ரஷியாவுக்கு மாற்றாக வளைகுடா மற்றும் அட்லாண்டிக் பகுதிகளில் உள்ள நாடுகளிடம் இருந்து கச்சா எண்ணெய் இறக்குமதி செய்ய முடிவெடுப்பதோடு உலக அளவில் கச்சா எண்ணெய் விலையில் மேலும் மாற்றங்கள் ஏற்பட்டால் ஆண்டுக்கு ரூ.61,300 கோடி முதல் ரூ.96,300 கோடி வரை இந்தியா கூடுதலாக செலவிட நேரிடும்.
    - iii. ரஷியாவுக்கு மாற்றாக மத்தியகிழக்கு, அமெரிக்கா, ஆப்பிரிக்கா மற்றும் தென் அமெரிக்க நாடுகளில் இருந்து இந்தியா கச்சா எண்ணெய் இறக்குமதி செய்தாலும் 60 முதல் 70 சதவீதம் வரை மட்டுமே ஈடுகட்ட முடியும்.
    - iv. ஆனால், இவை யாவும் ரஷிய கச்சா எண்ணெயின் சலுகை விலை மற்றும் தரத்துக்கு ஈடாகாது. இதனால் வர்த்தக ரீதியாக இந்தியாவுக்கு பெரும் பாதிப்புகள் ஏற்படக்கூடும்.
4. தமிழகத்தில் ஆனைமலை, முதுமலை, சத்தியமங்கலம், களக்காடு, ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இடங்களில் உள்ள புலிகள் காப்பகங்கள், கோவை, ஈரோடு, தருமபுரி, வேலூர் வனக் கோட்டங்கள், வன உயிரினச் சரணாலயங்கள் உள்ளிட்ட பகுதிகளில் சுமார் 2,800- மேற்பட்ட யானைகள் உள்ளன.
    - i. யானைகள் பாதுகாப்புக்காக பல்வேறு நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்து வந்தாலும், இவற்றின் மீதான தாக்குதல்களும், இதனால் ஏற்படும் இறப்புகளும் அதிகரித்து வருகின்றன.
    - ii. வனப் பகுதியில் போதிய தண்ணீர், உணவுகள் இல்லாததால், யானைகள் அடிக்கடி விவசாய நிலங்களுக்குள் புகுந்து விடுகின்றன.
    - iii. ஆண்டுதோறும் யானை-மனித மோதலால் சராசரியாக 100 யானைகள், 200 மனிதர்கள் உயிரிழக்கின்றனர். மேலும், ரயில்களில் அடிபட்டும் ஆண்டுதோறும் சுமார் 100-க்கு மேற்பட்ட யானைகள் உயிரிழக்கின்றன.

iv. இத்தகைய விபத்துகளில் 36 சதவீதம் அஸ்ஸாமிலும், 26 சதவீதம் மேற்கு வங்கத்திலும், 6 சதவீதம் தமிழகத்திலும் பதிவாகின்றன.
v. யானைகள் அழிவுக்கு அவற்றின் வாழ்விடம் சுருங்குதல், விவசாயத்துக்கு காடுக ளைச் சீரமைத்தல், வேட்டையாடுதல் ஆகியவை முக்கியக் காரணங்களாக உள்ளன.

5. திருநெல்வேலி மனோன்மணீயம் சுந்தரனார் பல்கலை முன்னாள் துணைவேந்தரும், கல்வியாளருமான மறைந்த வே.வசந்தி தேவியின் நினைவேந்தல் நிகழ்ச்சி சென்னையில் நடைபெற்றது.
6. நாடு முழுவதும் 5 கோடிக்கும் மேற்பட்ட நீதிமன்ற வழக்குகள் நிலுவையில் உள்ளன. அவற்றை விரைந்து முடிக்க, இணைய வசதி கொண்ட நீதிமன்றங்கள் மற்றும் அதற்கான உள்கட்டமைப்புக்கு ரூ.7,000 கோடி ஒதுக்கீடு செய்ய மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. மக்களுக்கும் நீதிக்கும் இடையிலான இடைவெளியைக் குறைக்க வேண்டும்.
7. வீடுகளில் துன்புறுத்தப்படும் குழந்தைகளை அடையாளம் காணவும் அவர்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்கவும் 'சுரக்ஷா மித்ரம்' என்ற விரிவான செயல்திட்டத்தை கேரள அரசு அறிமுகம்செய்ய உள்ளது. இதன்படி கேரள மாநிலத்தில் உள்ள அனைத்துப் பள்ளிகளிலும் சிறுவர்கள் தங்களது குறைகளை மனுக்களாக எழுதிப் போடுவதற்கு உதவிப் பெட்டிகள் நிறுவப்படும்.
8. இந்திய பொருளாதார வளர்ச்சியில் முக்கியப் பங்காற்றும் கடல்சார் போக்குவரத்தில் பணியாற்றுபவர்களுக்கு, அண்மையில் 'டிஜி ஷிப்பிங்' என்று அழைக்கப்படும் மத்திய கப்பல் போக்குவரத்து இயக்குநரகம் வெளியிட்ட சுற்றறிக்கை (31/2025) மாலுமிகளின் வாழ்வாதாரத்தை நேரடியாகப் பாதிக்கும் வகையில் அமைந்துள்ளது.
    i. இந்தப் புது சுற்றறிக்கையில், கப்பலில் பணியாற்றும் மாலுமிகள் சிறப்புப் பயிற்சி பெற்றதற்கான சான்றிதழ்களைச் சமர்ப்பிக்க வேண்டும். அதில், வெளிநாட்டு கல்வி நிறுவனங்கள் தரும் அனைத்துச் சான்றிதழ்கள் ஏற்கப்படாது என்று குறிப்பிடப்பட்டுள்ளது.
    ii. கடந்த ஜூலை தேதியிட்ட 18-ஆம் சுற்றறிக்கையின் படி, ஹோண்டுயூரஸ், பனாமா, டோகோ, கேபான், பெலிஸ், குக் தீவுகள் போன்ற வெளிநாடுகள் அளிக்கும் கடல்சார் தகுதிச் சான்றிதழ்கள் இனிமேல் இந்தியாவில் செல்லாது. இதனால், இந்த சான்றிதழ்கள் மூலம் வேலை செய்து வந்த ஆயிரத்துக்கும் மேற்பட்ட இந்திய மாலுமிகள் ஒரே இரவில் வேலை இழக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது.
    iii. மீனவ சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் வெளிநாடுகள் அளிக்கும் கப்பல் பணி சார்ந்த பயிற்சிகளைப் பெற்று மாலுமிகளாகப் பணியாற்றி வருகின்றனர்; பலர் தங்கள் தொழிலில் நிபுணர்களாகவும் உள்ளனர். ஆனால், மத்திய அரசின் சமீபத்திய சுற்றறிக்கையால் மாலுமிகள் பலர் வாழ்வாதாரத்தை இழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

9. **செய்திகளில் இடம்பெற்ற சில முக்கிய நபர்கள் :-**

    i. அர்ஜுன் எரிகைசி - இந்திய செஸ் கிராண்ட் மாஸ்டர்
    ii. சபாயென்கோ - பெலாரசிய டென்னிஸ் வீரர்
    iii. ஜானிக் சின்னர் - இத்தாலிய டென்னிஸ் வீரர்